## சுருக்கம்

குத்தகை – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – கூட்டுறவு நிறுவனங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான இடத்தை ஒதுக்கீடு செய்தல் – நில வாடகை நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டது – தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கும் பொருந்தும் என கூடுதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நசி5) துறை

அரசாணை (நிலை) எண்.106 நாள் : 13.8.2001

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.38, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.2.2001.
2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கடிதம் எண். சி/பிபி/பி3/57774/99, நாள் 14.3.2001.

---

**ஆணை:**

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

(1) பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு நிறுவனங்கள் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி நிலங்கள் கோரப்படும்போது, அந்நிலங்களுக்கான மாதக் குத்தகை வீதம் ~~ரூ~~ 2400 சதுர அடி நிலத்திற்கு கீழ்க்கண்ட வீதங்கள் என்ற அடிப்படையில் நிர்ணயித்து வசூலிக்கப்படலாம்.

(அ) மாநகராட்சி ரூ.300.00 (ரூபாய் முன்னூறு மட்டும்)
(ஆ) நகராட்சி ரூ.200.00 (ரூபாய் இருநூறு மட்டும்)
(இ) பேரூராட்சி ரூ100.00 (ரூபாய் நூறு மட்டும்)

(2) ஒவ்வொரு வருடமும் இவ்வாடகை 5 (விழுக்காடு) உயர்த்தப்பட வேண்டும்.

(3) மேலே குறிப்பிட்ட சலுகை வீத குத்தகை மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க குறைந்த பட்ச அளவிலான நிலத்திற்கு மட்டுமே பொருந்தும் அவ்வாறு குறைந்த பட்ச தேவையான நிலப்பரப்பை நிர்ணயித்து நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிற்கும் தெரிவிக்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(4) கூட்டுறவு சங்கப்பதிவாளர் நிர்ணயித்த குறைந்தபட்ச நிலப்பரப்பிற்கு மேலும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க ஒரு கூட்டுறவு நிறுவனம் இடம் கோரினால் அவ்வாறு கூடுதலாக கேட்கப்படும் நிலத்திற்கு, உள்ளாட்சி நிறுவனங்களால் சந்தை மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் குத்தகை / வாடகை செலுத்தப்பட வேண்டும்.

2. பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், விருதுநகர் "பாவாலி சாலையில்" உள்ள நகராட்சிக்கு சொந்தமான 2000 சதுர அடி இடத்தில் மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் அமைக்க இடம் ஒதுக்கப்பட்டு, நகராட்சி அவ்விடத்திற்கு ரூ.6,000/- என மாத வாடகை நிர்ணயித்து, கழகத்தினால் அத்தொகையை நகராட்சிக்கு செலுத்த இயலாமல் உள்ளது. அவ்விடத்திற்கு பெயரளவிலான ~~குத்தகையான~~ குத்தகையாக சதுர அடி ஒன்றுக்கு ரூ.1/- வீதம் மாத வாடகை நிர்ணயித்து ஆணையிடுமாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் வேண்டுகோளை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்தது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு நுகர்பொருள்கள் வழங்கி வருவதினாலும், அக்கழகம் லாபகர

நோக்கத்தோடல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தோடு இயங்கி வருவதாலும் பார்வை ஒன்றில் காணும் அரசாணை (நிலை) எண். 38, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 28.2.2001 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தினால் அமைக்கப்படும் மண்ணெண்ணெய் நிலையங்களுக்கும் பொருந்தும் என அரசு ஆணையிடுகிறது.

3. மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்கத் தேவையான குறைந்தபட்ச நிலம் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநருக்குத் தெரியப்படுத்துமாறு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஒம்./......
அரசுச் செயலாளர்.

பெறுநர்
.......

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஒம்.......
பிரிவு அலுவலர்.